சுருக்கம்

அமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – கோவை கோட்டம் – திருமதி ல.ராகசித்ரா என்பவர் கருணையடிப்படையில் 11.02.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – உரிய சட்டப்பிரிவுகளை தளர்த்தி பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

அரசாணை (டி) எண்.212

நாள்:21.11.2020
சார்வரி, கார்த்திகை–6,
திருவள்ளுவர் ஆண்டு, 2051

படிக்கப்பட்டன:

1. இணை ஆணையர் (வணிகவரி), கோவை கோட்டம், செயல்முறைகள் எண்.1742/2018/அ2, நாள் 04.02.2019
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையரின் கடித எண். ஒய்3/31503/2019, நாள் 12.03.2020.

(வணிகவரிகள்) 1 DEC 2020 சென்னை 600 0

*****

ஆணை:

வணிகவரித் துறையில், கோவை கோட்டம், வணிகவரி அலுவலர் அலுவலகம், பல்லடம் அலுவலகத்தில், பதிவுரு எழுத்தராகப் பணிபுரிந்த போது 11.02.2016 அன்று திருமதி அ.நாகரத்தினம் என்பவர் மரணமடைந்ததால் அவரது மகள் திருமதி ல.ராகசித்ரா என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 06.02.2018 அன்று விண்ணப்பித்துள்ளார். திருமதி ல.ராகசித்ரா என்பவரின் பிறந்த தேதி 05.05.1993. அரசு ஊழியர் காலமானபோது தனியரின் வயது 22 ஆண்டுகள் ஆகும். இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது; அவருடைய குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என்பதால், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி அளித்த விண்ணப்பத்தின் மீது விசாரணை மேற்கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு, முதலாவதாகப் படிக்கப்பட்ட இணை ஆணையர் (வணிகவரி), கோவை கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி, திருமதி ல.ராகசித்ரா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டார். தனியர் கோவை, துணை ஆணையர் (வணிகவரி), சரகம்–II அலுவலகத்தில் 11.02.2019 முற்பகல் அன்று பணியேற்பு செய்துள்ளார். தனியரின் தற்காலிக பணி நியமனத்தை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. திருமதி ல.ராகசித்ரா கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்வதற்கு தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான அதாவது இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும் அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 22 ஆண்டுகள் மற்றும் பணி நியமனம் செய்யப்படும்போது வயது 25 ஆண்டுகள் ஆகும்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, இறந்த அரசுப் பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15–ல் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, மேற்படி தனியருக்கு வழங்கப்பட்ட பணி

நியமனமானது மேற்காணும் சட்டப்பிரிவிற்கு முரணானது என்பதால் அதனைத் தளர்வு செய்யும் நிலை எழுகிறது. மேலும், பணப்பலன்களுடன் தனியரின் பணியினை பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்ய கருதும் பட்சத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)–ஐயும் தளர்வு செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்காணும் சட்டப்பிரிவுகளைத் (பிரிவுகள் 15 மற்றும் 28(2)) தளர்வு செய்ய வேண்டிய நிலை எழுகிறது.

4. எனவே, முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் பரிந்துரையை ஏற்று, வணிகவரித் துறையில், கோவை கோட்டம், துணை ஆணையர் (வணிகவரி), சரகம்–II அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி ல.ராகசித்ரா என்பவரின் தற்காலிக பணி நியமனத்தை, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ன் பிரிவுகள் 15–யையும், மேலும், பணப்பலன் நியமன நாளிலிருந்து வழங்க ஏதுவாக, மேற்படி சட்டத்தின் பிரிவு 28(2)–யையும் தளர்த்தி, தனியர் பணியில் சேர்ந்த நாளான 11.02.2019 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இளநிலை உதவியாளர் பணித்தரத்தில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் பிரிவு 58–ல் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, திருமதி ல.ராகசித்ரா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் பணிவரன்முறை செய்வதற்கு ஏதுவாக, அவர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ன் பிரிவுகள் 15–யையும், மேலும், பணப்பலன் நியமன நாளிலிருந்து வழங்க ஏதுவாக, மேற்படி சட்டத்தின் பிரிவு 28(2)–யையும் தளர்த்தி தமிழக ஆளுநர் அவர்களால் ஆணையிடப்படுகிறது.

6. இவ்வாணையின்படி தனியர் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின், அவற்றைப் பெற்றிட விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்
அரசு செயலாளர்

பெறுநர்:

திருமதி ல.ராகசித்ரா, இளநிலை உதவியாளர்,
துணை ஆணையர் (வணிகவரி), சரகம்–II அலுவலகம், கோவை கோட்டம்,
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)

நகல்:

இணை ஆணையர் (வணிகவரி), கோவை கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி–1) துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை –9.
அரசு செயலாளரின் தனிச் செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(ஆ.கரிகாலன்)
அரசு சார்புச் செயலாளர்